# காலாண்டுத்தேர்வு மாதிரிவினாத்தாள் --- 1 ( 2022 )

## மேல்நிலை முதலாம் ஆண்டு

## கணக்குப்பதிவியல்

நேரம் : 3.00 மணி மதிப்பெண் : 90

### பகுதி ---- I

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். 20 × 1 = 20

1. நிதிநிலைக் கணக்கின் அடிப்படையாக விளங்குவது
   அ) சமூகக் கணக்கியல் ஆ) காரியதரிசிகளின் கணக்கியல்
   இ) மேலாண்மைக் கணக்கியல் ஈ) பொறுப்பு கணக்கியல்

2. நிதித்தகவல்களின் அகப்பயனாளராகக் கருதப்படுபவர் யார்?
   அ) கடனீந்தோர் ஆ) பணியாளர்
   இ) வாடிக்கையாளர் ஈ) அரசு

3. வணிகத்தின் உரிமையாளர் இட்ட முதலிற்கு, வணிக நிறுவனம் கடன்பட்டிருக்கிறது என்பதை கூறும் கருத்து
   அ) பண மதிப்பீட்டுக் கருத்து ஆ) அடக்கவிலை கருத்து
   இ) வணிகத் தனித்தன்மை கருத்து ஈ) இரட்டைத்தன்மை கருத்து

4. இறுதி சரக்கிருப்பு, அடக்கவிலை அல்லது விற்று ஈட்டக்கூடிய மதிப்பு இதில் எது குறைவோ அதனடிப்படையில் மதிப்பிடப்படும் என்ற கணக்கியல் கோட்பாடு
   அ) முக்கியத்துவ மரபு ஆ) பண மதிப்பீட்டுக் கருத்து
   இ) முன்னெச்சரிக்கை மரபு ஈ) நிகழ்வு தீர்வு / கருத்து

5. சொத்து கணக்கு கையாள்வது
   அ) தனிப்பட்ட நபர்கள் ஆ) செலவுகள் மற்றும் இழப்புகள்
   இ) சொத்துகள் ஈ) வருமானம் மற்றும் இலாபங்கள்

6. எந்த வரிசை முறையில் வணிக நடவடிக்கைகள் பதியப்பட வேண்டும்?
   1) குறிப்பேடு 2) நடவடிக்கை 3) இருப்பாய்வு 4) பேரேடு
   அ) 2 4 1 3 ஆ) 1 4 3 2 இ) 2 1 4 3 ஈ) 1 2 3 4

7. கணக்கியல் சமன்பட்டின்படி சரியாக இல்லாதது எது?
   அ) சொத்துக்கள் = பொறுப்புகள் + முதல் ஆ) சொத்துக்கள் = முதல் + பொறுப்புகள்
   இ) பொறுப்புகள் = சொத்துக்கள் + முதல் ஈ) முதல் = சொத்துக்கள் - பொறுப்புகள்

8. உரிமையாளரால், வணிகத்திலிருந்து எடுக்கப்படும் தொகை வரவுவைக்கப்படும் கணக்கு
   அ) எடுப்புகள் கணக்கு ஆ) ரொக்கக் கணக்கு
   இ) முதல் கணக்கு ஈ) கொள்முதல் கணக்கு

9. பற்று மற்றும் வரவு இனங்களை குறிப்பேட்டிலிருந்து பேரேட்டுக் கணக்குகளில் எடுத்து எழுதும் நடைமுறையை இவ்வாறு அழைக்கலாம்.
   அ) கூட்டுதல் ஆ) எடுத்தெழுதுதல்
   இ) குறிப்பேட்டில் பதிதல் ஈ) இருப்புக் கட்டுதல்

10. ஒரு கணக்கின் வரவு மொத்தத்தைவிட பற்று மொத்தம் அதிகமாக இருப்பின் அதன் பொருள்
    அ) வரவு இருப்பு ஆ) பற்று இருப்பு
    இ) இருப்பு இன்மை ஈ) பற்றும் மற்றும் வரவு இருப்பு

B.BALAJI, GHSS, PARANTHUR, KANCHIPURAM DT. 9629647613



11. பேரேட்டுக் கணக்குகளை தயாரித்து முடித்தவுடன் அடுத்து தயாரிக்கப்படுவது
    அ) வியாபாரக்கணக்கு ஆ) இருப்பாய்வு இ) குறிப்பேடு ஈ) இலாப நட்டக் கணக்கு

12. கீழ்க்கண்ட கணக்குகளில் எந்தக் கணக்கின் இருப்பு இருப்பாய்வில் பற்றுப் பத்தியில் தோன்றும்?
    அ) பற்பல கடனீந்தோர் கணக்கு ஆ) செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டு கணக்கு
    இ) எடுப்புகள் கணக்கு ஈ) முதல் கணக்கு

13. நிலைச்சொத்துக்கள் கடனுக்கு வாங்கியது பதிவு செய்யவேண்டிய ஏடு
    அ) கொள்முதல் ஏடு ஆ) விற்பனை ஏடு
    இ) கொள்முதல் திருப்பஏடு ஈ) உரிய குறிப்பேடு

14. கொள்முதல் ஏட்டில் பதிவு செய்வது
    அ) அனைத்து சரக்குகளின் கொள்முதல் ஆ) அனைத்து சொத்துக்களின் கடன் கொள்முதல்
    இ) அனைத்து சரக்குகளின் கடன் கொள்முதல் ஈ) அனைத்து சொத்துக்களின் கொள்முதல்

15. ரொக்கஏடு பதிவு செய்வது
    அ) அனைத்து ரொக்கப்பெறுதல்கள் ஆ) அனைத்து ரொக்கச் செலுத்தல்கள்
    இ) (அ), (ஆ) ஆகிய இரண்டும் ஈ) அனைத்து கடன் நடவடிக்கைகள்

16. சில்லறை ரொக்க ஏட்டின் இருப்பு
    அ) ஒரு செலவு ஆ) ஒரு இலாபம் இ) ஒரு சொத்து ஈ) ஒரு பொறுப்பு

17. வங்கிச் சரிகட்டும் பட்டியல் தயாரிப்பதில் உதவுவது
    அ) வங்கி அறிக்கை ஆ) ரொக்க ஏடு
    இ) சில்லறை ரொக்க ஏடு ஈ) வங்கி அறிக்கை மற்றும் ரொக்கஏட்டின் வங்கி பத்தி

18. பொருத்துக :
    i) துணை ஏடுகள் -- 1. தோற்றப் பதிவேடு
    ii) இருப்பாய்வு -- 2. பற்றுஇருப்பு, வரவு இருப்பு
    iii) உரிய குறிப்பேடு -- 3. குறிப்பேடுகளின் பல்வேறு பிரிவுகள்
    iv) குறிப்பேடு -- 4. பொதுக்குறிப்பேடு

| | (i) | (ii) | (iii) | (iv) |
|---|---|---|---|---|
| அ) | 2 | 3 | 4 | 1 |
| ஆ) | 1 | 3 | 4 | 2 |
| இ) | 3 | 2 | 4 | 1 |
| ஈ) | 4 | 2 | 1 | 3 |

19. ரொக்க ஏட்டின் படி இருப்பு ₹ 2,000. வங்கியால் பற்று செய்யப்பட்ட வங்கிக் கட்டணம் ₹ 50 ரொக்க ஏட்டில் பதியப்படவில்லை எனில் வங்கி அறிக்கையின் படி இருப்பு என்ன?
    அ) ₹. 1,950 வரவு இருப்பு ஆ) ₹. 1,950 பற்று இருப்பு
    இ) ₹. 2,050 பற்று இருப்பு ஈ) ₹ . 2,050 வரவு இருப்பு

20. பின்வரும் எக்காரணங்களினால் வாடிக்கையாளர், சரக்களிப்பவருக்கு சரக்கினைத் திருப்பி அனுப்புகிறார்?
    (i) குறைபாடுள்ள சரக்குகள்
    (ii) வாடிக்கையாளருக்கு தாமதமாக சரக்கினை அனுப்புதல்
    (iii) தேவைக்கு அதிகமான சரக்குகளை அனுப்புதல்
    (iv) சரக்கு மாதிரியிலிருந்து மாறுபட்டிருத்தல்

    சரியான விடையை தேர்ந்தெடுக்கவும்.
    அ) (iii) மட்டும் தவறு ஆ) (iv) மட்டும் தவறு இ) அனைத்தும் தவறு ஈ) அனைத்தும் சரி

B.BALAJI, GHSS, PARANTHUR, KANCHIPURAM DT. 9629647613

Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com - Whatsapp No: 7358965593

## பகுதி - II

**எவையேனும் 7 வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் 30 - க்கு கட்டாயம் விடையளிக்கவும்.** 7 × 2 = 14

21. கணக்கியலின் ஏதேனும் இரண்டு பணிகளைக் கூறுக
22. கணக்கேடுகள் பராமரிப்பை வரையறு
23. வரவு இருப்பு என்றால் என்ன?
24. ரொக்க ஏட்டின் வகைகள் யாவை?
25. கீழ்கண்ட நடவடிக்கைகளைக் கொண்டு குறிப்பேட்டினை தயாரிக்கவும் :
    1) எழில் வியாபாரம் தொடங்கியது ₹. 75,000
    2) சரக்கு கொள்முதல் செய்தது ₹. 25,000
    3) ஊதியம் வழங்கியது ₹. 27,000
26. பின்வருவனவற்றை ஆள்சார்கணக்கு, சொத்து கணக்கு மற்றும் பெயரளவு கணக்கு என்று வகைப்படுத்துக
    1) முதல் 2) அறைகலன் 3) கொள்முதல் 4) கனரா வங்கி
27. கீழ்க்கண்ட குறிப்பேட்டுப் பதிவுகளுக்குரிய நடவடிக்கைகளைத் தருக.
    அ) சம்பளம் க/கு ப
        வங்கி க/கு
    ஆ) மதன் க/கு ப
        விற்பனை க/கு
28. கணக்கியல் சமன்பாட்டில் விடுபட்ட தொகையினைக் கண்டுபிடி.

| | சொத்துகள் | = | முதல் | + | பொறுப்புகள் |
|---|---|---|---|---|---|
| (அ) | ? | = | 13,000 | + | 12,000 |
| (ஆ) | 24,500 | = | 17,000 | + | ? |

29. பின்வரும் நடவடிக்கைகளை எந்த துணை ஏட்டில் பதிய வேண்டும்?
    அ) சுமதியிடமிருந்து கடனுக்கு சரக்கு வாங்கியது
    ஆ) எழுதுபொருட்களை விற்பனை செய்யும் கஸ்தூரி விற்பனையகம் X நிறுவனத்திற்கு அறைகலன் விற்றது
30. பின்வரும் நடவடிக்கைகளிலிருந்து அறைகலன் கணக்கைத் தயாரிக்கவும்.

| 2016 | | ₹. |
|---|---|---|
| ஜன 1 | கையில் உள்ள அறைகலன் | 2,000 |
| 1 | அறைகலன் ரொக்கத்திற்கு வாங்கியது | 4,000 |
| 30 | அறைகலன் விற்றது | 400 |

## பகுதி — III

<u>எவையேனும் 7 வினாக்களுக்கு விடையளிக்கவும்.அவற்றில் வினா எண் 40- க்கு கட்டாயம் விடையளிக்கவும்.</u> 7 × 3 = 21

31. கணக்கியலின் பொன்னான விதிகள் யாவை?
32. எதிர்ப்பதிவை உதாரணத்துடன் விளக்குக.
33. ரொக்கத் தள்ளுபடிக்கும் வியாபாரத் தள்ளுபடிக்கும் உள்ள வேறுபாடுகளில் ஏதேனும் மூன்றினை எழுதுக.



34. ஆனந்த் என்பவர் ஜவுளி வியாபாரம் செய்யும் வியாபாரி. பின்வரும் நடவடிக்கைகளுக்கு ஜனவரி 2018 இல் குறிப்பேட்டினை தயாரிக்க

| ஜனவரி | | ₹ |
|---|---|---|
| 1 | வியாபாரம் தொடங்க ரொக்கமிட்டது | 70,000 |
| 2 | வங்கியில் செலுத்திய ரொக்கம் | 40,000 |
| 5 | அலுவலகப்பயனுக்காக வங்கியிலிருந்து பணம் எடுத்தது | 5,000 |
| 12 | தொண்டு நிறுவனங்களுக்காக துண்டுகள் வழங்கியது | 3,000 |

35. பின்வருவனவற்றை கணக்கியல் சமன்பாட்டின்படி பதிவு செய்து காட்டுக.
    i) ரொக்கத்துடன் தொழில் தொடங்கியது ₹. 60,000
    ii) ரொக்கத்திற்கு சரக்கு வாங்கியது ₹. 20,000
    iii) ₹. 10,000 மதிப்புள்ள சரக்கினை விற்பனைச் செய்தது ₹. 15,000
    iv) வாடகை ரொக்கமாக செலுத்தப்பட்டது ₹. 500
36. பின்வரும் இருப்புகளைக் கொண்டு இருப்பாய்வு தயாரிக்கவும்.

| கணக்கின் பெயர் | தொகை ₹ | கணக்கின் பெயர் | தொகை ₹ |
|---|---|---|---|
| வங்கி கடன் | 2,00,000 | கொள்முதல் | 1,80,000 |
| செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டு | 1,00,000 | விற்பனை | 3,00,000 |
| சரக்கிருப்பு | 70,000 | கடனாளிகள் | 4,00,000 |
| முதல் | 2,50,000 | வங்கி | 2,00,000 |

37. திரு. குமாரின் உரிய துணை ஏடுகளில் பதிவு செய்க.

| 2019 | | | ₹. |
|---|---|---|---|
| பிப் | 1 | காஜோலிடம் கடனுக்கு சரக்கு வாங்கியது | 25,000 |
| | 7 | சுனில் நமக்கு சரக்கு விற்றது | 9,000 |
| | 15 | கௌசல்யாவிடமிருந்து கடனுக்கு சரக்கு வாங்கியது | 3,000 |
| | 20 | சங்கரிடமிருந்து ரொக்கத்திர்கு சரக்கு வாங்கியது | 10,000 |

38. 2018, ஜனவரி 1 அன்று வினோத் என்பவரின் ஏடுகளில் கீழ்க்கண்ட இருப்புகள் காணப்பட்டன.
    <u>**சொத்துகள்**</u>: ரொக்கம் ₹. 40,000 ; சரக்கிருப்பு ₹. 50,000 ; ராம் என்பவரிடமிருந்து பெறவேண்டியது ₹.20,000; இயந்திரம் ₹.40,000;
    <u>பொறுப்புகள்</u> : விஜய் என்பவருக்கு செலுத்தவேண்டியது ₹.10,000
    தொடக்கப் பதிவினைத் தந்து வினோத்தின் முதல் கணக்கில் எடுத்து எழுதவும்.
39. பின்வரும் விவரங்களிலிருந்து ஜெயக்குமார் என்பவரின் 2016 டிசம்பர் 31- ம் நாளுக்குரிய வங்கிச் சரிகட்டும் பட்டியலை தயார் செய்க.
    (அ) ரொக்க ஏட்டின்படி இருப்பு ₹. 7,130
    (ஆ) செலுத்திய காசோலை வசூலாகாதது ₹. 1,000
    (இ) வாடிக்கையாளர் நேரடியாக வங்கியில் செலுத்தியது ₹. 800



Padasalai.Net

Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com - Whatsapp No: 7358965593

40. கீழ்க்கண்ட விவரங்களிலிருந்து முன்பணமீட்பு முறையில் பாகுபடுத்தப்பட்ட சில்லறை ரொக்க ஏட்டைத் தயாரிக்கவும்.

| 2017 ஜுலை | ₹ |
|---|---|
| 1 காசாளரிடமிருந்து முன்பணம் பெற்றது | 2,000 |
| 7 மடல் ஏடு மற்றும் பதிவேடுகள் வாங்கியது | 100 |
| 10 ஆட்டோ ரிக்ஷா கட்டணம் கொடுத்தது | 200 |
| 18 தபால்செலவுகள் செய்தது | 100 |
| 21 எழுது பொருள்கள் வாங்கியது | 450 |

## பகுதி - IV

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** 7 × 5 = 35

41. அ) கீழே கொடுக்கப்பட்டுள்ள குறிப்பேட்டுப்பதிவுகளைக் கொண்டு பேரேட்டுக் கணக்குகளை தயாரிக்கவும்.

<u>கண்ணன் ஏடுகளில் குறிப்பேட்டுப் பதிவுகள்</u>

| நாள் | விவரம் | பே.ப.எ | பற்று ₹. | வரவு ₹. |
|---|---|---|---|---|
| 2018 அக்.1 | கொள்முதல் க/கு ப<br>வங்கி க/கு<br>( சரக்குகள் வாங்கி காசோலை கொடுத்தது ) | | 30,000 | 30,000 |
| 5 | வங்கி க/கு ப<br>விற்பனை க/கு<br>(சரக்குகள் விற்கப்பட்டு தொகை தேசிய மின்னனு நிதிபரிமாற்றம் மூலம் பெறப்பட்டது) | | 40,000 | 40,000 |
| 11 | ரொக்க க/கு ப<br>விற்பனை க/கு<br>(சரக்குகள் விற்று ரொக்கம் பெற்றது) | | 20,000 | 20,000 |
| 21 | பாரதி க/கு ப<br>விற்பனை க/கு<br>(கடன் விற்பனை ) | | 25,000 | 25,000 |
| 30 | ரொக்க க/கு ப<br>பாரதி க/கு<br>(பாரதியிடமிருந்து பெற்ற ரொக்கம்) | | 10,000 | 10,000 |

( அல்லது )

ஆ) குறிப்பேட்டுப் பதிவுகளைத் தந்து, ரொக்க கணக்கில் எடுத்து எழுதுக.

| 2016 | ₹ |
|---|---|
| ஜுன் 1 ரொக்கத்துடன் தொழில் தொடங்கியது | 1,10,000 |
| 10 கூடுதல் முதல் இட்டது | 50,000 |
| 28 சொந்தசெலவுக்கு ரொக்கம் எடுத்துக் கொண்டது | 20,000 |



42. அ) கீழ்கண்ட விவரங்களில் கொடுக்கப்பட்டுள்ள விளக்கக் குறிப்பிலிருந்து குறிபேட்டுப்பதிவில் விடுபட்ட தொகையினையும், அதன் கணக்குகளையும் கண்டுபிடித்து, முழுமையான குறிப்பேட்டில் எழுதவும்.

<u>கோபுவின் ஏடுகளில் குறிப்பேட்டுப் பதிவுகள்</u>

| நாள் | விவரம் | பே.ப.எ | பற்று ₹. | வரவு ₹. |
|---|---|---|---|---|
| 2003 அக்.1 | ---------- ப<br>-----------<br>( கோபு ரொக்கத்துடன் தொழில் தொடங்கியது ) | | 1,00,000 | ---------- |
| 5 | -------------- ப<br>---------------------<br>(தானியங்கி பணம் வழங்கும் இயந்திரம் மூலம் பணம் எடுத்தது) | | 15,000 | ---------- |
| 11 | ------------- ப<br>----------<br>(வங்கியில் கடன் பெற்றது ) | | ---------- | 50,000 |
| 21 | ----------------- ப<br>-------------------<br>( உரிமையாளரின் சந்தா காசோலை மூலம் செலுத்தியது ) | | 1,000 | 1,000 |
| 30 | ----------------- ப<br>-----------------<br>( பெற்ற கழிவு ) | | 700 | 700 |

( அல்லது )

ஆ) ஷியாம் எனும் எழுதுபொருள் வியாபாரியின் குறிப்பேட்டில் 2017 ஆகஸ்ட் மாதத்திற்குரிய நடவடிக்கைகளை பதிவு செய்க.

ஆகஸ்டு

1 ரொக்கம் ₹.4,00,000 மற்றும் சரக்கிருப்பு ₹. 5,00,000 - த்துடன் தொழில் தொடங்கியது.

2 A என்பவருக்கு சரக்கு விற்பனை செய்து நிகழ்நேர மொத்ததீர்வகம் (RTGS) மூலமாக ரொக்கம் பெற்றது ₹. 2,50,000.

3 Z என்பவருக்கு கடன் விற்பனை செய்தது ₹. 20,000.

5 Z என்பவர்மீது எழுதிய ₹. 20,000 க்கான மாற்றுச் சீட்டினை அவர் ஏற்பு செய்தார்.

8 Z என்பவரிடமிருந்து பெற்ற மாற்றுச்சீட்டு வங்கியில் தள்ளுபடி செய்தது ₹. 19,000.

43. அ) பின்வரும் நடவடிக்கைகளின் கணக்கியல் சமன்பாட்டு விளைவுகளை பதிவிட்டு காட்டுக.

(அ) இராஜ் ₹.40,000 ரொக்கத்துடன் வணிகத்தைத் தொடங்கினார்.

(ஆ) ₹.30,000 வைப்புத் தொகையுடன் வங்கியில் கணக்கினை ஆரம்பித்தார்.

(இ) ஹரி என்பவரிடமிருந்து ₹. 12,000 க்கு கடனுக்கு சரக்கு வாங்கப்பட்டது.

(ஈ) இராஜ் தமது சொந்த பயன்பாட்டிற்காக ₹.1,000 எடுத்துக்கொண்டார்.

(உ) பற்று அட்டையினைப் பயன்படுத்தி ₹.10,000-க்கு அறைகலன்கள் வாங்கப்பட்டது.

(ஊ) முருகன் என்பவருக்கு சரக்கு விற்பனை செய்யப்பட்டு, ₹. 6,000 பெறப்பட்டது.

(எ) அலுவலகத் தேவைக்காக வங்கியிலிருந்து பணம் எடுக்கப்பட்டது ₹. 1,000.



Padasalai.Net

Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com - Whatsapp No: 7358965593

( அல்லது )

ஆ) கீழ்கண்ட கணக்கியல் சமன்பாட்டில் விடுபட்ட தொகையினையும், விவரங்களையும் எழுதுக

| விவரம் | ரொக்கம் ₹. | சரக்கிருப்பு ₹. | அறைகலன் ₹. | வங்கி ₹. | கடனாளி ₹. | = | முதல் ₹. |
|---|---|---|---|---|---|---|---|
| ரொக்கம் மற்றும் சரக்குடன் தொழில் தொடங்கியது | + 1,40,000 | + 60,000 | 0 | 0 | 0 | = | ------- |
| சமன்பாடு | + 1,40,000 | ------- | 0 | 0 | 0 | = | + 2,00,000 |
| ------------- | -20,000 | | + 20,000 | 0 | 0 | = | 0 |
| சமன்பாடு | ------- | + 60,000 | -------- | | 0 | = | + 2,00,000 |
| வங்கியில் செலுத்தியது | -------- | | | -------- | 0 | = | 0 |
| சமன்பாடு | +80,000 | + 60,000 | +20,000 | + 40,000 | 0 | = | + 2,00,000 |
| இரவி என்பவருக்கு ₹.10,000 மதிப்புள்ள சரக்கு ₹.15,000 க்கு விற்கப்பட்டது | 0 | -------- | 0 | 0 | -------- | = | +5,000 |
| சமன்பாடு | +80,000 | +50,000 | ----- | + 40,000 | +15,000 | = | +2,05,000 |

44. அ) பாபு என்பவரது ஏடுகளிலிருந்து எடுக்கப்பட்ட கீழ்காணும் இருப்புகளைக் கொண்டு 31. 3. 2016 ஆம் நாளுக்குரிய இருப்பாய்வு தயாரிக்கவும்.

| கணக்கின் பெயர் | தொகை ₹ | கணக்கின் பெயர் | தொகை ₹ |
|---|---|---|---|
| கை ரொக்கம் | 7,000 | பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு | 7,000 |
| பற்பல கடனாளிகள் | 5,400 | பற்பல கடனீந்தோர் | 11,800 |
| சம்பளம் | 6,800 | முதல் | 25,000 |
| வாராக்கடன் | 200 | கொள்முதல் | 45,000 |
| தொடக்கச் சரக்கிருப்பு | 15,400 | விற்பனை | 50,000 |

( அல்லது )

ஆ) பின்வரும் இருப்பாய்வினை சரி செய்யவும்.

| வ.எண் | கணக்கின் பெயர் | பற்று இருப்புகள் ₹. | வரவு இருப்புகள் ₹. |
|---|---|---|---|
| 1 | தொடக்கச் சரக்கிருப்பு | 1,00,000 | |
| 2 | சம்பளம் | 36,000 | |
| 3 | கடனீந்தோர் | 1,32,000 | |
| 4 | வங்கி | 35,000 | |
| 5 | உள் ஏற்றிச் செல் செலவு | 18,000 | |
| 6 | பெற்ற வாடகை | 9,000 | |
| 7 | அளித்த தள்ளுபடி | 6,000 | |
| 8 | கொள்முதல் | 3,48,000 | |
| 9 | செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டு | 60,000 | |
| 10 | கடனாளிகள் | | 45,000 |
| 11 | வெளித்தூக்குக் கூலி | | 15,000 |
| 12 | முதல் | | 1,63,000 |
| 13 | உள் திருப்பம் | | 9,000 |
| 14 | பெற்ற தள்ளுபடி | | 12,000 |
| 15 | வியாபாரச் செலவுகள் | | 18,000 |
| 16 | விற்பனை | | 3,68,000 |
| 17 | கட்டடம் | | 1,14,000 |
| | மொத்தம் | 7,44,000 | 7,44,000 |



45. அ) பின்வரும் நடவடிக்கைகளை மின்சாதனங்களை விற்பனைச் செய்யும் சுபஸ்ரீ மின் பொருள் நிறுவனத்தின் கொள்முதல் ஏட்டில் பதிவு செய்க.

2017

ஏப்ரல் 5 கார்த்திக் மின் பொருள் நிறுவனத்திடமிருந்து கடனுக்கு வாங்கியது.
10 மின் சலவைப் பெட்டிகள் ஒன்று ₹. 2,500 வீதம்
5 மின்சார அடுப்புகள் ஒன்று ₹. 2,000 வீதம்

ஏப்ரல் 19 கேதான் மின் பொருளகத்திடமிருந்து கடனுக்கு வாங்கியது
3 மின்சார நீர்சூடேற்றி ஒன்று ₹. 6,000 வீதம்

ஏப்ரல் 25 போலார் மின்பொருள் விற்பனையகத்திடமிருந்து கடனுக்கு வாங்கியது
10 மின் விசிறிகள் ஒன்று ₹. 2,000 வீதம்

ஏப்ரல் 29 M நிறுவனத்திடமிருந்து ரொக்கத்திற்கு வாங்கியது.
10 மின்சார அடுப்புகள் ஒன்று ₹. 3,000 வீதம்

( அல்லது )

ஆ) பின்வரும் நடவடிக்கைகளைக் கொண்டு நிரஞ்சன் அவர்களின் 2017 பிப்ரவரி மாதத்திற்கான துணை ஏடுகளை தயாரிக்கவும்.

| 2017 | | ₹ |
|---|---|---|
| பிப்ரவரி 1 | முகில் நிறுவனத்திடம் கடனுக்கு சரக்கு வாங்கியது | 12,480 |
| பிப்ரவரி 4 | சச்சின் நிறுவனத்திற்கு கடனுக்கு சரக்கு விற்றது | 15,000 |
| பிப்ரவரி 6 | மனிஷ் நிறுவனத்திற்கு கடனுக்கு சரக்கு விற்றது | 12,100 |
| பிப்ரவரி 7 | சச்சின் நிறுவனம் திருப்பிய சரக்கு ; அதற்கு பணம் செலுத்தப்படவில்லை | 1,200 |
| பிப்ரவரி 9 | முகில் நிறுவனத்திற்கு சரக்கு திருப்பி அனுப்பியது; பணம் பெறப்படவில்லை | 1,500 |
| பிப்ரவரி 10 | மணிஷ் நிறுவனத்திற்கு கடனுக்கு சரக்கு விற்றது | 13,300 |
| பிப்ரவரி 14 | முகில் நிறுவனத்திடம் சரக்கு கடனுக்கு வாங்கியது | 15,200 |



Padasalai.Net

Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com - Whatsapp No: 7358965593

46. அ) பின்வரும் நடவடிக்கைகளை ரொக்கம் மற்றும் தள்ளுபடி பத்திகளுடைய ரொக்க ஏட்டில் பதியவும்.

2017

ஜன 1 கைரொக்கம் ₹. 11,500

5 ரொக்க வைப்பு இயந்திரத்தின் மூலம் இராமநாதனுக்கு செலுத்தியது ₹. 300

அவர் அளித்ததள்ளுபடி ₹. 10

8 ரொக்கத்திற்கு சரக்கு வாங்கியது ₹. 400

10 இராஜகோபாலிடமிருந்து ரொக்கம் பெற்றது ₹. 980அவருக்கு அளித்த தள்ளுபடி ₹. 20

15 ரொக்கத்திற்கு சரக்கு விற்றது ₹. 400

21 சாந்தி என்பவருக்கு ரொக்கம் செலுத்தியது ₹. 295 அவரிடம் பெற்றதள்ளுபடி ₹. 5

25 கூலி ரொக்கமாகச் செலுத்தியது ₹. 50

31 சஞ்சீவ் என்பவருக்கு ₹. 390 அளித்து கணக்கை முழுவதும் தீர்த்துக் கொண்டது ₹.400

( அல்லது )

ஆ) கல்யாணசுந்தரம் என்பவரின் முப்பத்தி ரொக்க ஏட்டில் கீழ்க்கண்ட நடவடிக்கைகளைப் பதிவு செய்க.

| 2017 ஜன. | ₹ |
|---|---|
| 1 ரொக்க இருப்பு | 42,500 |
| வங்கி இருப்பு | 35,000 |
| 3 ரொக்க விற்பனை மூலம் பெற்ற தொகை | 15,700 |
| 4 வங்கியில் ரொக்கம் செலுத்தியது | 11,500 |
| 6 ரொக்கக் கொள்முதல் | 14,300 |
| 9 மின்னணு தீர்வை முறையில் வங்கி நேரடியாக பங்காதாயம் பெற்றது | 2,000 |
| 10 பொங்கல் முன்பணம் பணியாளர்களுக்கு வங்கி மூலம் செலுத்தியது | 17,000 |
| 12 நாகராஜனிடமிருந்து ரொக்கம் பெற்றது | 11,850 |
| அவருக்கு அளித்த தள்ளுபடி | 150 |

17 மகேஷுக்கு கொடுக்க வேண்டிய ₹. 20,000 - த்தில் ₹. 19,700 செலுத்தி அவர் கணக்கு தீர்க்கப்பட்டது

47. அ) பின்வரும் தகவல்களிலிருந்து 2017 டிசம்பர்31-ம் நாளுக்குரிய வங்கிச் சரிகட்டும் பட்டியலை தயாரித்து வங்கி அறிக்கையின்படியான இருப்பினைக் கணக்கிடவும்

| விவரம் | தொகை ₹. |
|---|---|
| 1. ரொக்க ஏட்டின் படி இருப்பு | 15,000 |
| 2. செலுத்திய காசோலை இன்னும் வரவு வைக்கப்படாதது | 1,000 |
| 3. 2017 டிசம்பர் 31 - க்கு முன்னர் விடுத்த காசோலை, ரொக்க ஏட்டில் பதியப்பெற்று, அந்நாள் வரை செலுத்துகைக்கு முன்னிலைப்படுத்தப்படவில்லை | 1,500 |
| 4. வங்கியால் நேரடியாகப் பெற்ற பங்காதாயம் | 200 |
| 5. வங்கியால் நேரடியாகப் செலுத்தப்பெற்ற வாடகை | 1,000 |
| 6. வங்கி வசூலித்த பாதுகாப்பு பெட்டக வாடகை, ரொக்க ஏட்டில் பதியப்படவில்லை | 1,200 |
| 7. 2017 டிசம்பர் 30 அன்று வங்கியால் செய்யப்பட்ட தவறுதலான பற்று | 500 |
| 8. இணைய வங்கி வாயிலாக செலுத்தியது, ரொக்க ஏட்டில் இருமுறை பதிவு செய்யப்பட்டது | 300 |

( அல்லது )

ஆ) 2017, மே மாதத்திற்கான சேஷாத்ரி அவர்களின் பின்வரும் நடவடிக்கைகளை தனிப்பத்தி ரொக்க ஏட்டில் பதிவு செய்க.

| மே | ₹. |
|---|---|
| 1 கையிருப்பு ரொக்கம் | 40,000 |
| 5 ஸ்வாதியிடமிருந்து பெற்ற ரொக்கம் | 4,000 |
| 7 கூலி ரொக்கமாகக் கொடுத்தது | 2,000 |
| 10 சசிகலாவிடமிருந்து ரொக்கத்திற்கு கொள்முதல் செய்தது | 6,000 |
| 15 ரொக்கத்திற்கு விற்பனை செய்தது | 9,000 |
| 17 கணிப்பொறி வாங்கியது | 15,000 |
| 22 சபாபதிக்கு ரொக்கம் செலுத்தியது | 5,000 |
| 28 சம்பளம் கொடுத்தது | 2,500 |
| 30 வட்டிப்பெற்றது | 500 |



B.BALAJI, GHSS, PARANTHUR, KANCHIPURAM DT. 9629647613

Padasalai.Net

Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com - Whatsapp No: 7358965593